# இராமதேவர் ஞானகேசரி

பதிப்பு

க. அற்புதமணி

நெறியாளர்

வீ. அரசு

பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
மே 2006

# இராமதேவர் ஞானகேசரி

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப்பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு


பதிப்பாளர்

**க. அற்புதமணி**

நெறிய.......

**வீ. அரசு**

பேராசிரியர் – தலைவர்

**தமிழ் இலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக்கழகம்**
**சென்னை - 600 005.**


**மே 2006**

“சுவடியியல் மற்றும் பதிப்பியல்”
பட்டயப் பேற்றிற்காக
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும்
பதிப்பேடு எண் :43010503

# நெறியாளர் சான்றிதழ்

**முனைவர் வீ. அரசு,**
பேராசிரியர் - தலைவர்
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் நடைபெற்று வரும் **'சுவடியியல் மற்றும் பதிப்பியல்'** நிறைசான்றிதழுக்கான **"இராமதேவர் ஞானகேசரி"** என்னும் இப்பதிப்பேட்டினைச் செல்வி **க. அற்புதமணி** அவர்கள் என் மேற்பார்வையில் உருவாக்கியுள்ளார் எனவும் இந்தப் பதிப்பேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

**(பேராசிரியர் வீ. அரசு)**

நாள் :
இடம்: சென்னை -5.

# பதிப்பாளர் உறுதிமொழி

**க. அற்புதமணி,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
திருக்குறள் ஆய்வுப் பிரிவு,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் நடைபெற்று வரும் **'சுவடியியல் மற்றும் பதிப்பியல்'** நிறைசான்றிதழுக்கான **"இராமதேவர் ஞானகேசரி"** என்னும் ஓலைச்சுவடி என் சொந்த முயற்சியில் உருவானது என்றும் இப்பதிப்பேடு இதற்கு முன்வேறு எந்தப் பட்டயப் பதிப்பிற்கும் அளிக்கப் பெறவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

பதிப்பாளர்,

**(க. அற்புதமணி)**

நாள் :
இடம்: சென்னை -5.

அனைத்திற்கும் மூலகாரணமாகிய

பரமபிதாவிற்கு இந்நூல்

அர்ப்பணம்

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| **நன்றியுரை** | | **I** |
| **பதிப்புரை** | | **II - VI** |
| **இராமதேவர் ஞானகேசரி** | | **1-51** |
| **பின்னிணைப்பு** | | |
| 1. | துணை நூற்பட்டியல் | 52-53 |
| 2. | செய்யுள் முதற்குறிப்பு (அகரநிரல்) | 54-56 |
| 3. | அருஞ்சொற்பொருள் (அகரநிரல்) | 57-59 |
| 4. | ஞானகேசரியில் நோய்களும், நோய் தீர்க்கும் முறைகளும் (அகர நிரல்) | 60 |
| 5. | இறைவனைக் குறிக்க பயன்படுத்திய அடைமொழிகள் (அகர நிரல்) | 61 |
| 6. | ஞானகேசரியில் உள்ள சித்தர் குழுவுக்குறிச் சொற்கள்(அகரநிரல்) | 62 |

# நன்றியுரை

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் நடைபெற்றுவரும் சுவடியியல் மற்றும் பதிப்பியல் எனும் பட்டயப்படிப்பில் சேர்ந்து படிப்பதற்கும் பதிப்பதற்கும் அனுமதி அளித்த எமது துறைத்தலைவர் பேரா.வீ. அரசு அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமதேவர் ஞானகேசரி என்ற சுவடியைக் கொடுத்து புத்தகமாக வெளிவர பல வகையில் எனக்கு உதவிய முனைவர் வீ.ஞானசிகாமணி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சுவடி பதிப்பியல் படிப்பை படிக்கவேண்டும் என்ற என் விருப்பத்தை அன்புடன் ஏற்று இசைவு தந்து என் ஒவ்வொரு முன்னேற்றத்திற்கும் காரணமாக விளங்கிய, விளங்கி வருகின்ற என் பெற்றோருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முயற்சியில் பல நிலைகளில் எனக்கு துணைபுரிந்து என் நண்பர்கள் லோ. ஜெயலட்சுமி, பா. தாமோதரன் ஆகியோருக்கு என் நன்றி.

இவ்விலக்கியத்தை கணிப்பொறியில் அச்சிட்டு புத்தகமாக வடிவமைத்துக் கொடுத்த டுடே கிராபிக்ஸ் திரு. ஆர். பாபு அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(க. அற்புதமணி)**

இடம்:
நாள்:

# பதிப்புரை

இராமதேவர் என்ற சித்தரால் இயற்றப்பட்ட ஞானகேசரி நூற்றிஒரு பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. . இப்பாடல்கள் அந்தாதி அமைப்பில் எழுதப்பட்ட எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தபாவால் இயற்றப்பட்டுள்ளது. இச்சுவடிகட்டில் பதினாறாம் சுவடியில் இருந்து நூற்றிமுப்பது சுவடிவரை உள்ளது. இதர்க்கு முந்தைய பதினைந்து ஓலைச் சுவடிகளை காணவில்லை. இக்கட்டில் தொன்னூற்று ஏழாம் சுவடிமுதல் நூற்றிபத்தொன்பதாம் சுவடிவரை இந்த இராமதேவர் ஞானகேசரி இடம் பெற்றுள்ளது.

கேசரி என்பதற்கு லெக்சிகன் 'சிங்கம் , கேசரியாதுனம், கொம்மட்டி மாதுளை, குங்குமப்பூவுஞ் சர்க்கரையுங் கலந்து பக்குவஞ்செய்யப்பட்ட கோதுமை ரவைப்பண்டம்' [1] என்று பொருள் கூறுகின்றது. நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி 'யோகாசனத்தில் ஒன்று என்றும் ஒரு வானரன்' [2] என்னும் பொருள் கூறுகின்றது. தமிழ் தமிழ் அகரமுதலி இதர்க்கு 'அரிமா, சிங்கம், அரியனை, கொம்மட்டி மாதுளை, ஒருவகை சிற்றுண்டி' [3] என்றும் பொருள் கூறுகின்றது. மதுரைத் தமிழ்பேரகராதி, 'அங்கயோகாசனத் தொன்று, ஆகாயகமனம், ஒருவானாரன், குதிரை, சிங்கம், பெருங்காயம், கொம்மட்டிமாதுளை, ஒரு நதி, ஓரினிப்புப் பண்டம்' [4] என்று பொருள் கூறுகின்றது. சுவடியியில் அமைந்துள்ள பாடல்களைப் படித்தால் கேசரி என்பது பரம்பொருளை, தெய்வத்தைக் குறிப்பதாக உள்ளது. எனவே ஞானகேசரி என்பதற்கு பொதுவான இறைநிலையை உடைய ஒரு பரம்பொருள் என்று பொருள் கொண்டால் சரியானதாக இருக்கும்.

இராமதேவர் தான் ஒரு சித்தர் என்பதை,

தொண்டனென நின்றனடா கோடி காலஞ்
சொர்கபத மெய்க்கவே ஆனதுருவஞ் சென்று
நின்றனடா பரஞான கேசரியை நோக்கி
நிலைதவரா சித்தனென்றுத் தேவ னென்றும்
கொண்டனடா குருஞான தேசிகன் தன்னருளால்

(பா. 66)

என்ற வரிகளின்மூலம் நமக்குப் புலப்படுத்துகின்றார்.

தஞ்சை சரசுவதி மகால் வெளியிட்ட சுவடி விளக்க அட்டவணையில் இராமதேவர் என்ற பெயரில் பல பாடல்கள் அங்கிய சுவடிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் 'இராமதேவர் ஞானகேசரி' என்ற பெயருள்ள இந்த சுவடி அந்த அட்டவணையில் இடம்பெறவில்லை.

இப்பாடல்களில் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரா, தாரணை, தியானம், சமாதி என்ற அட்டாங்க யோகம் பற்றியும்,அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்ற எண்வகை சித்திகளையும் கர்மசித்தி, காயசித்தி, வாதசித்தி பற்றியும் தொட்டதெல்லாம் சித்தியாகும் நிலைகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

இதனை,

காணவே தீபாவளி கண்ணிற் கண்டால்
கயிலாச மோட்சகெதி பதவி யுண்டாம்
பேணவே அட்டகர்ம சித்தி யுண்டாம்
பிலமான வாசியதுக் குயிருண் டாகும்

பூணவே கர்மசித்தி காய சித்தி
பொருளான பொருள்விளைக்கும் வாத சித்தி
தோனவே தொட்டதெல்லாஞ் சித்தி யாகுஞ்
சுத்தமுள்ள கேசரி வினோதம் பாரே

(பா. 49)

என்ற பாடல்வழி அறியலாம்.

மேலும், மனித உடம்பில் உள்ள எட்டு ஆதாரங்களாகிய மூலாதாரம் , சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை, சகஸ்ரம், துரியாதீதம் போன்றவைகளைப் பற்றியும் ஞானகேசரியில் கூறப்பட்டுள்ளது. இராமதேவர் குண்டலீலி சக்தியை மூலாதாரத்தில் இருந்து எழுப்பி நெற்றியில் கொண்டு சென்று அமிர்தத்தை உண்ணும் நிலைகயையும் கூறுகின்றார்.

இதனை,

நேர்க்குதுக் கின்னமொரு கேசரி வினோத
நோயான நோய்களெல்லா நொருங்கி மிகப்போக
தீர்க்கமுள்ள தேகமது சித்திமய மாக
சிவசிவா வாகியது தீறமுடனே நிற்க
மார்க்கமுடன் பரஞான கேசரியை நோக்க
மகத்தான குருவருளால் தீபமதைக் காண
நாக்குநுனி யமுர்தமது பூரணதிற் செல்ல
நாதாந்த கற்பமது நன்மைதரும் பாரே.

(பா.82)

என்ற மேற்கண்ட பாடல் விளக்கி நிற்கின்றது.

சித்தர் என்றால் எப்படி இருத்தல் வேண்டும் என்பதை,

"பாரப்பா கேசரி வினோதம் நூறும்

பத்திக் கொண்டு சிவயோகமிரு நூறும்பாரு
சேரப்பா மனந்தெறி ஆயிரமும் பாரு
சிவசிவா பலதிரட்டு அஞ்நூறும் பாரு
நேரப்பா வயித்தியநூ லென்பதும் பாரு
நேர்மையுடன் அன்பது முப்பதுவும் பாரு
சீரப்பா சோசியமும் பதினெண் பாசை
செம்மையுடன் பார்த்தவனே சித்த னாமே"

(பா. 59)

என்று சித்தர்களுக்கு வேண்டிய தகுதிகளை வரையறுத்து கூறுகின்றார் இராமதேவர்.

சித்த மருந்து பற்றிய செய்திகள் பலபாடல்களில் விரவி காணப்படுகின்றன. பின்னிணைப்பு நான்கில் குறிப்பிட்டப் பட்டுள்ள நோய்கள் தீர்வதற்கான மருந்துகள் இப்பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

இப்பாடல்களை ஒரு குருவிடம்கொடுத்து அவர் மூலமாய் சீடர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று இராமதேவர் கூறுகின்றார். சீடன் என்பவன் எச்சாதியைச் சார்ந்தவனாகவும் இருக்கலாம் என்றும் ஆனால் மெய்யானவனாகவும், மெய்மையான புத்தி உடையவனாகவும், வாக்குறுதி, மனதுறுதி, திட சுத்தம், பொறுமை, கருணை போன்ற குணநலன்கள் உடையவனாக கண்டிப்பாக இருத்தல் வேண்டும் என்று வரையறுக்கின்றார்.

இந்த நூறுபாடல்களும் தேனிலும் இனிமையானவை இவற்றை குருவிடம் கொடுத்து முறையாக படிக்காவிட்டால் வேதாந்ததீ அவர்களை சுட்டு வருத்திவிடும் என்று இராமதேவர் எச்சரித்தும், இப்பாடல்களில் கூறப்பட்டுள்ளவை எல்லாம் மிகவும் இரகசியமானவைகள் இவற்றை நல்லவர்களைத் தேடி

அவர்களுக்கு மட்டும் சொல்ல வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றார்.

சித்தர்கள் மனித உடல் 96 வகை தத்துவத்தில் இயங்குகின்றது என்று கூறுவதை இராமதேவர் தம்பாடல்களில் ஆங்காங்கே விரவி காணப்படுகின்றது. இந்த 96வகை தத்துவங்களை பேராசிரியர் டாக்டர் சிதம்பரதாணுப்பிள்ளை அவர்கள் சித்த மருத்துவ உடல் தத்துவம் என்ற தமது நூலில்,

"நமது உடலானது ஐம்பூதங்களாலும், ஏழு தாதுக்களாலும் உருப்பெற்று, பூதம் - 5, பொறி -5, புலன் -5, கர்மேந்திரியம்-5, கர்மவிஷயம்-5, கரணம்-4, அறிவு-1, கால்-10, நாடி-10, மண்டலம்-3, கோசம்-5, அவஸ்தை-5, குணம்-3, ஆதாரம்-6, இராகம்-8, தோசம்-3, வினை-2, ஈடணை-3, மலம்-3, ஆசயம்-5 ஆகிய 96 தத்துவங்களின் இயக்கத்தில் அமையப்பெற்றது."[5] (ப.48) என்று கூறுகின்றார்.

இராமதேவ சித்தரின் ஞானகேசரி என்னும் பாடல் தொகுப்பில் பூமிஞானம், பரஞானம் என்று இருவகை நிலை ஞானங்களும் கூறப்பட்டுள்ளது. பூமியில் மனித வாழ்க்கைக்குத் தேவையான ஒழுக்கலாறுகள் கூறப்பட்டுள்ளன. இந்த ஒழுக்கலாறுகளால் முத்திநிலை அடையும் பரஞான நிலையும் விவரிக்கப்பட்டுள்ளது.

1. Tamil Lexicon, Vol.II, P. 1091.
2. நா. கதிரைவேற்பிள்ளை, தமிழ்மொழி அகராதி, ப. 520.
3. மு. சண்முகம் பிள்ளை (தொகு), தமிழ் தமிழ் அகரமுதலி, ப. 373.
4. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, முதல் பாகம், ப. 716.
5. சிதம்பரதானுப்பிள்ளை, எஸ்., சித்த மருத்துவ உடல் தத்துவம், ப. 48.

# இராமதேவர் ஞானகேசரி

ஆதிபரா பரஞான கேசரியைத் தானும்
அசையாமல் நெஞ்சகத்தில் தவத்தினால் நிறுத்தி
நீதியெனும் பரஞான கேசரி வினோதம்
நேர்மையுடன் யான்பாடக் குருவருளே சரணம்
சாதியெனு மெழுவகையுந் தன்வசமாய்க் கண்டு
சடத்தா னந்தமென்ற முர்தமதைக் கொண்டு
சோதியெனுஞ் செகசோதி ஞான மயமான
தூண்டாத தீபமதைத் துணையெனக் கொண்டேனே. 1

துணையான தீபமடா தூண்டாத தீபஞ்
சுயஞ்சோதி யானதொரு தீபம்தீர சேர்ந்து
வினையான கருவிகாணா திகளை நன்றாய்
விபரமுடன் தானறிந்து அனல்தனை மூட்டி
சுனையான மோகமெனுஞ் சுகதுர்கம் ரெண்டுஞ்
சுட்டந்த பதியான துருவமதில் நின்று
முனையான சுளிமுனை யென்றழலான தீயில்
முக்காலும் வலம்வந்து முன்னிலை கண்டேனே. 2

கண்டந்த முன்னிலையில் பரஞான தீபங்

கருவான தீபமதில் கருணை பெறநின்று

கொண்டந்தப் பரஞான கேசரியைக் கண்டு

உரிமையுடன் வளபதியில் நேர்மையுட னின்றேன்

விண்டந்தக் கேசரியும் வாராமா வென்று

விபரமுடன் வினோதவகை அருள்மிக யீந்தாள்

அண்டபிரானருள் கொண்டார் மனுட வாக்கியம்

அருளான வாக்கிய மென்றறிந்து மிகநல்லே. 3

நில்லந்த நிலைதனிலே நின்றுநிலை கொண்டால்

நிசமான பரஞான கேசரிதன் னருளால்

சொல்லந்த மானதொரு கலைகள் மூன்றதுந்

தோணுமடா உன்திடத்திரது குவமதின் மீதில்

செல்லந்த யிடகலை அகார மயமாகுந்

திருவான மின்கலை யுகாரமய மாகும்

கவலந்த மானதொரு ஓங்கார ரூபம்

கருணைபெற முப்பொருளுங் கண்டுமிக நின்றேன். 4

கண்டுமிக நின்றதொரு ஞான கேசரியை
கருவாக வினோத மயமாக னூர்துவாய்
விண்டுமிகக் கொண்டந்தக் குருவினிடஞ் சென்று
வினோத மயமான குருஞான கேசரியை
கொண்டந்தப் பாதமதில் வைத்துமிக நின்றேன்
குணமான பரஞான கேசரியை நீதான்
பண்டுள்ள பொருள்களை வினோத மயமாகப்
பாடினதை யாரறிவார் பயனறியத் தானே. 5

தானென்ற சந்தோசமாக யென்னை யழைத்து
தவமாகச் சொன்னதொரு ஞான கேசரியில்
தேனென்ற வினோதமய மான பொருள்
தன்னை செப்பமுடன் சொன்னதுவு மெத்தமிகநன்று
வீனென்ற வீணபயல் களிப்பொருளைக் கண்டால்
மேலான சித்தர்களை வீரியமே செய்வார்
கோனென்றுங் குருவென்று மதியால் நிற்பார்
குருவான பெரியோர்கு மனநோகும் பாரே. 6

பாரப்பா வினோத மயமான கேசரியை

பன்பாக நல்லொர்க் கன்பாக யீவாய்

ஆரப்பா அறிவார்கள் கேசரியின் மாய்கை

ஆருப  மய மானதொரு குருவினுடதீபம்

நேரப்பா நின்றவர்கள் தீபமதை அரிவார்

நிலைகண்டு அவர்களிட மின்னூலை யாய்வாய்

வீரப்பா கொண்டதொரு வீணாதகைக் கீந்தால்

வேதாந்தத் தீயதுவு மெய்யாகச் சுடுமே. 7

மெய்யான பரஞான கேசரி வினோதம்

மென்மைபேர் ஒருவர்களும் பாடுவதை யறியோம்

அய்யனே உனதுடைய வாக்கிய மெய்கண்டோம்

அன்பாக யின்னூலுக் கொரு நூலுமில்லை

துய்யனே யின்னூலைப் பதமாரயப் பாரு

சுகமாக யின்னுலக்குச் சாபமது தீத்தோம்

வையகந் தன்னில்வெகு சித்தர்களு முண்டு

மாறாட்டஞ் செய்வார்கள் மனதரிந்து தள்ளே. 8

தள்ளடா சுகதுர்கமிரண்டு மிக நீயுந்

தாயான பரஞான கேசரிதன் னருளால்

நில்லடா நிலையான அந்தநிலை தனிலே

நிசமாக மதியமுர்தம் அருவியது பாயுங்

கொள்ளடா அந்தமுர்தம் பசிதீர உண்டு

குருவான சிவசக்தி ரெண்டையுமே பூசி

சொல்லடா சிவயோகப் பதவியிலே நின்று

திரமாக நால்பதமுஞ் சேர்ந்து மிகக்கொண்டே. 9

கொண்டதொரு பரஞான கேசரியைத் தானுங்

கூர்மையுடன் கண்டுதொழ நேர்மை தனைச்சொல்வோம்

கண்டதொரு சந்திரனுஞ் சூரியனும் ரெண்டு

கலந்தோடு மாகாசச் சுழியனதில் ஒன்றும்

விண்டதொரு மூன்று மும்மண்டல மதாகும்

விபரமுடன் உன்திடத்தில் மெய்யாகப் பாரு

அண்டமெனுந் திரிகூடமாக் கினை தன்னதிலே

அடங்கிநின்று பருதிமதி சுடர்தனைக் கேளே. 10

கேளடா சதிரகிரி கொடுமுடி தன்னதிலே
கிருபையுடன் வாழுகிற யிடகலை பின்கலையும்
சூளடா சுடரான சுழிமுனை தன்மீதில்
துலங்குகின்ற விவரமதை சூடமதாய்க் கேளு
பாளடா யிடையான சந்திரனார் சேரில்
பஞ்சபூதங் களோடுபல வரிவு ஒடுங்கும்
வாளடா வலமான சூரியனார் சேரில்
மகத்தான ஐம்புலனு மறிவுமிக வருமே. 11

அரியாம லிடகலையும் பின்கலையுங் கூடி
அசையாமல் வலமாக அந்தரத் திலேகி
நெரியான சுழியினிடம் ஒடுங்குவதே யானால்
நின்றிலங்கு மரிவுடனே திசவாய்வு ஒடுங்கும்
குரியுடனே ஒடுங்குவது யிலங்குவதோ யில்லை
கூர்மையுட னிதையறிந்து குருவருளைப் போற்றி
பரியான பரஞான கேசரியைக் கண்டு
பத்திகொண்டு யிருகலையும் பதிப்பதனால் சித்தே.
12

சித்தாகுஞ் சிவமாகுஞ் சிவயோக மாகுஞ்
சிவசிவா பூரணத்தின் தரிசனமு மாகும்
முத்தாகுஞ் தேகமது சித்தி யாகும்
முர்கமுள்ள வாகியது தீர்க்கமு டனய்யா
வித்தான பரஞான கேசரியிற் சேர்ந்து
விபரமுள்ள வாசியது தீபமதிர் புக்கும்
பத்தான தீபமது வாசியதின் வளியாய்
பக்குவமாய்த் தானிரங்கி மூலமதிற் சேரும். 13

மூலமதிற் சேர்ந்தந்தத் தீபவொளி தானும்
முத்திகொண்ட பரஞான கேசரியிற் சென்று
ஞானமெனும் புருவநடுப்பு டமலதி னாம்
நடுவான பீடமடா பிரம்மமதின் பீடம்
சீலமெனும் பீடமதில் நடுவு மாகி
சிவஞான குருதேசி சத்தி சிவமாகி
கோலமுடன் குடியிருந்த பாகமதை யறியக்
குறியொன்று சொல்லுகிறேன் நெறியாகக் கேளே.

14

நெரியென்ற புருவநடுக் கமலமீ தனிலே
நேர்மையுள்ள சத்திசிவ மானகலை ரெண்டுங்
குரியாகத் தானோக்கி ரெசக பூர்வமாய்
கும்பமெனும் பரஞான கேசரியைக் கண்டால்
பரிவான மனதுருகி ஓர்மனதாய் நின்று
பெருமைபெற அமுர்தரச பாணமதைக் கொண்டு
அரிவான அரிவுபரி பூரணமாய் நின்றால்
அரகரா சிவயோகத் தங்கமது வாமே. 15

அங்கமெனுஞ் சிவயோக மனுசரிக்க வேண்டி
அருளான பரஞான கேசரியைக் கண்டு
பங்கமில்லா அகாரமடா சிவதீட்சை யாகும்
பகாரிய உகாரமடா சத்தியுட தீட்சை
சங்கையுட னிதுரெண்டுஞ் சாதகமாய் கொண்டு
தானென்ற நிலையறிந்து தானாக நின்றால்
மங்காத அறிவுபரி பூரணமாய்க் காணும்
மகத்தான வாலையுட பூசைதனைக் கேளே. 16

கேளுநீ வாலையுட சக்கரத்தை மைந்தா
கிருபையுட னிருதயமா முக்கோணந் தனிலே
வாளுநீ அதினடுவே விந்துவது சாத்தி
மார்கமுள்ள விந்ததின் மேல்சுழித்து மிகநின்று
ஆளுநீ விபூதிதனை உத்தளமாய்ப் பூசி
அன்பாக மேருவை முன்ரெசகமும் பண்ணி
தாளுநீ பூரணமாய்ப் பூரகமே செய்தால்
தவறாது சத்தியுட பூசையிது வாச்சே. 17

ஆச்சப்பா சத்தியுட பூசைதனைச் சொன்னோம்
அன்பாகச் சிதம்பரத்தின் பூசைதனைக் கேளு
காச்சிதரும் பரஞான கேசரிதன் னருளால்
கருவான புருவநடுக் கமல மீதினிலே
தாக்கியென நின்றிலங்கும் ஓங்காரம் நிறுத்தி
தன்மையுள்ள ஓங்காரம் தனில்நடு வாக
ஆச்சியெனும் அச்சாமால் சுழியான தனியை
அன்பாகத் தானிறுத்திக் கேசரியை நோக்கே. 18

நோக்குவது அங்கென்று கண்டத்தில் நிறுத்தி
நுன்மையுடன் அம்மென்று திருவாசல் பூட்டி
தாக்குவது ரவிமதியுஞ் சரியா யந்தத்
தமர்வாச லானபரஞான கேசர த்தில்
வாக்குமன் தொன்றாகு மனது பூரணமாய்
வழுவாமல் நிலைப்பொழுது வாசம தாயிருந்தால்
ஆக்கைநிலை யழியாது அமுர்தமே கமுமாம்
ஆனந்த மானசிவ யோகமது வாமே. 19

ஆமப்பா வர்மமவன் இடப்பாக மீதில்
அசையாத பரஞான கேசரிதன் னருளால்
நாமப்பா வென்றமொழி தனையகத்தி யந்த
நடுவான தீபவொளி பரஞான வெளியில்
வாமப்பால் தன்னருளால்த் தானிலங்கும் போதில்
மக்களே தானறிந்து வாசிதனைப் பூட்டி
காமப்பால் கானல்பால் கருவரிந்து கொண்டு
கருவான பிரதிவியும் அப்புமிகச் சேரே. 20

சேத்தந்த கிடைக்கிநிகர் தாளகமுங் கேந்தி
செம்மையுள்ள துரிசுடனே காரமொடு லிங்கம்
பாத்தந்த ஏழுசுரக்குங் கலவமதி லிட்டு
பக்குவமா யாட்டுவது பலத்தினுட சாத்தால்
வாத்துமிக நன்றாட்டி வட்டதுபோல் பண்ணி
மைந்தனே புடம்போடு சிவயோகப் படிக்கு
காத்துமிகப் புடமாரியெடுத்து மிகப் பார்த்தால்
கருவான யெழுசரக்குங் கட்டிமிகப் போமே. 21

கட்டியதோர் சாக்கதனை யெடுத்தந்த யிடைக்கி
களிம்பான செம்புருக்கி அதனிலிதைத் தாக்கு
திட்டமுடன் செம்பதுவுங் கட்டிமிகப் போகுஞ்
சிவாயகுரு பரஞான கேசரிதன் னருளால்
சட்டமுட னிச்செம்பை வெள்ளிதனை உருக்கித்
தாக்கடா பத்திலிது ஒன்றுமிகத் தானும்
வட்டமதி யானதொரு வெள்ளியது தானும்
மார்கமுடன் தான்சிவந்து பொன்ரூப மாச்சே. 22

ஆச்சப்பா யின்னமொரு வினோதவகை கேளு
அடங்காத மால்தேனி அடங்கும்வகை சொல்வோம்
நீச்சப்பா வெகுநீச்சப் பிரிதிவி தன்னோடே
நிசமான அப்பதுவம் ஒன்றாகக் கூட்டி
வாச்சப்பா தாரமதுக் கிடைக்கிடையே சேத்து
பக்குவமாய் யாட்டுவது பல்த்தினுட சாத்தால்
பேச்சப்பா வொன்றுமில்லை வட்டதுபோலப் பண்ணி
பேணியே புடம்போடு சிவயோகப் படியே. 23

சிவயோக மானபரஞான கேசரி யால்த்
தெளிவாக அம்மருந்தைச் செம்புதனி லூற்றி
தவமாக அச்செம்பை வெள்ளி தனக்கீவாய்
தப்பாமல் மதியொழு ரவிமூன்று மாக
அவமாகப் போகாமல் உருக்கியதைப் பார்க்க
ஆறேழு வயதான பொன்னதுவு மாகும்
பவமான பவக்குறைகள் தீர்க்குமது பொன்தான்
பரஞான கேசரி வினோதமது வாமே. 24

ஆமப்பா யின்னமொரு கேசரி வினோதம்

அழுக்கான செம்பதுவும் வெள்ளி மயமாக

நாமப்பா சொல்லுகிறோம் பிரிதிவி தன்னோடே

நன்றான வெண்சாரை ரசமுடன் பாசாணம்

தாமப்பா நால்சரக்குங் கலவமதி லிட்டு

தப்பாம லாட்டுவது பத்தினுட சாத்தால்

சாமப்பா நால்சரக்குச் சிவயோகப் படிக்குக்

தண்மையுடன் புடம்போட்டுத் தானெடுத்துக்கொள்ளே.

25

கொள்ளந்த யிடைக்கிடைதான் வெள்ளி தனையுருக்கி

கொடுத்துவிடு புடம்போட்ட மருந்துதனை மைந்தா

மெள்ளந்த வெள்ளிதனைத் தானெடுத்துக் கொண்டு

மேலான பரஞான கேசரியை நோக்கி

செல்லந்தக் குகைதனிலே செம்பதனை யுருக்கி

செம்மையுடன் வெள்ளிதனைப் பத்துக் கொன்றீய

நல்லந்தச் செம்பதுவும் வெள்ளிமய மாகி

நானூறு வயதுள்ள மன்மதனு மாமே. 26

ஆனாலு மின்னமொரு கேசரி வினோதம்

அன்பாகச் சொல்லுகிறேன் தேதெனவே கெழக்கில்

கோனான குருவருளால் சொல்லுவது கேளு

குறிப்பான மால்தேனி லிங்கமொடு துரிசு

தேனான கெந்தியுடன் காரமுடன் யந்துஞ்

செம்மையுட னோறிடையாயக் கலவ மிதிலிட்டு

தானான பிரிதிவியைச் சரிசமனாய்க் கூட்டி

தாக்கியரை பளச்சாத்தால் மய்யது போலத்தாலே. 27

தானப்பா அரைந்துவட்டி வட்டதுபோலப் பண்ணி

தன்மையுடன் புடம்போடு சிவயோகப் படிக்கு

வீணப்பா போகாமல் சரக்காலுங் கட்டி

மென்மைபெற யிருக்குமடா கேசரிதன் னருளால்

நானப்பா வென்றமொழி தனையதிகங் கொண்டு

நலமான செம்பதுவுங் குகைதனிலே யுருக்கி

கானப்பா புடம்போட்ட மருந்ததனை யீய

கருவான செம்பதுவுங் கட்டிமிகப் போமே. 28

கட்டிமிக நின்றதொரு செம்பதனை யெடுத்து
கருவான வெள்ளிதனிற் பத்துக் கொன்றீய
திட்டமுடன் மதிசிவந் தெட்டு வயதாகி
செம்மையுட னிருக்குப் பெண்தனக்கு மைந்தாச்
சட்டமுடன் பரித்தகடு பட்டமது தீந்தால்
தவறாத மங்கையவள் சந்தோஷ மாகி
அட்டகர்ம்மந் தனக்குமவள் முன்னிலையாய நிற்பாள்
ஆனந்த மான பரஞான கேசரியே. 29

கேசரிவினோ தமதைக் கிருபையுடன் பாரு
கெதிகொண்டு பரஞான கேசரியை நோக்கு
நீசரியாய் நின்றந்தவாசி தனைப் பூட்டி
நிலைநின்று நின்னருளைக் காத்து
ஆசரிநீ ரெசகமாய்ப் பூரகத்தைக் காரு
அப்பனே பூரகத்தால் கும்பகத்தில் நில்லே. 30

நில்லந்த நிலைதனிலே தன்னருளைக் காரு

நிசமான பரஞான கேசரியை நோக்கு

சொல்லந்த மானகருக கேசரி வினோதந்

துருவமுள்ள வினோதமது பரம ரகசியமாம்

சொல்லந்த ரகசியமாய்ச் சொன்னபொருள் தன்னை

செகத்தோர்கு விள்ளாதே நல்லோரைத் தேடு

மல்லென்ற மல்ப்பிடிக்கும் வாய்வீன்ற கீயந்தால்

மகத்தான குத்தமவரு மனதறிவில் சேரே. 31

சேரப்பா யின்னமொரு கேசரி வினோதம்

செம்பான பாண்டமதிற் சிலகூறும் வகைதான்

ஆரப்பா அரிவார்க ளாவிமதி தானே ஒன்று

அருளான பிரதிவியு மப்புமிகச் சேத்து

காரப்பா ரவியீச மாலினுட பீசங்

கருவான அறுசரக்குங் கலவ மதிலிட்டு

வீரப்பா தானொடுங்க ஆட்டுவது கேளு

மேலான பளத்தினுட சாரதனால் மைந்தா. 32

சாரமுள்ள பழச்சாத்தாலி மைய்யது போலாட்டி

சங்கையுடன் தான்வழித்துப் பாண்ட மதிலிட்டி

காரமுள்ள பாண்டமதை ரவிமுகத்தில் வைத்தால்

கண்மூடி முழிக்குமுன்னேக சிந்துமிக வூரும்

ஈரமுள்ள யடமதில் கெங்கை மிக

ஊறியிருக்குமடா அந்தமுரதங் குப்பிதனில் நடத்து

பாரமுள்ள கெங்கையென்று பதனமதாய் வைத்து

பார்க்கையிலே அதனில் வெகுவினோத மயமாமே. 33

ஆமப்பா வினோதமது யெதுவகை யென்றால்

அடங்காத சரக்குகளை அடங்குமிந்த நீர்தான்

நாமப்பா சொல்லுகிறோ யெச்சரக் கானாலும்

நன்றாகச் சுயநீரில்ச் சுருக்குமிகத் தாக்கி

சாமப்பா புடம்போடு சிவயோகப் படிக்கி

தயவாக உருகியொரு மணிபோலே நிற்கும்

தாமப்பா அந்தமணி பரப்ப மதுவாக

தண்மையுட னின்னமொரு செயநீரு கேளே. 34

கேளப்பா யிரும்பதினால் பாத்திர முண்டாக்கி
கிருபையுடன் பாத்திரத்தில் மருந்து வகைகேளு
ஆரப்பா பிரிதிவியு மக்கினி யாகாசம்
அருளான நவச்சாரஞ் சூடனுடன் துரிசு
மானப்பா ஆட்டுவது சம்பளத்தில் சாத்தால்
மகத்தான கலவமதிலிரு மூன்று சரக்கும்
கோளப்பா வாராமல் மையது போலாட்டி
குணமாகவே வழித்துவிட்டது போலப் பண்ணே. 35

பண்ணிரிதோர் வட்டதனை அய்ப்பாண்டந் தனிலே
பக்குவமாய்த் தான்போட்டு ரவிதனிலே வைத்தால்
புண்ணியனே உப்பதுவுங் கசிந்து மிகவூறி
பூரணமாய் நிற்குமடா தெளிவான நிலந்தான்
வன்னிநிர் மானதொரு சியநீறு தன்னை
மார்கமுடன் முன்கட்டுமணி தனக்கு மைந்தா
தன்னிமையாய்ச் சுருக்கிடவே மலந்துமிக நீறும்
சாதாகமாய் நீதியது பற்பமது வாச்சே. 36

ஆச்சப்பா பற்ப்பமது செந்தூர மாக
அருளான கேசரிவினோத வகை கேளு
பேச்சப்பா பேசாத மண்பாண்ட மீதில்
பேணியே தான்வைக்கு மருந்துவகை தன்னை
நீச்சப்பா உப்புடனே அஞ்சுடனே அஞ்சு
நிசமான சரக்கதுவுங் கூட்டிமிக நன்றாய்
பாச்சப்பா கலவமதில் பழச்சாறு விட்டு
பன்பாக மையதுபோ லாட்டிமிக வழியே. 37

வழித்தொரு மருந்ததனை மண்பாண்டத் துள்ளே
மார்கமுடன் தானிடமும் தனிலே வைக்க
அழுத்தமுள்ள செயநீரா மன்னீரு தன்னில்
அன்பான வீரமது பூரமுடன் ரென்றும்
செழித்தமன துறுதியினாள் பொடிசெய்து போட்டு
செம்மையுடன் வைத்திருக்கச் செயநீரின் பெருமை
வெளுத்ததொரு பர்பமதிர பத்துகொன் றீந்து
மென்மைபேரா வியில்வைக்கச் செந்தூர மாச்சே. 38

ஆச்சப்பா செந்தூரம் பதனமதா யெடுத்து

அன்பான வெள்ளிசெம்புத் தகடதிலே பூசி

பாச்சப்பா ஓட்டில்வைத்து சற்குருவைத் தொழுது

பக்குவமாய்ப் புடம்போட்டு யெடுத்து மிகப்பாரு

பேச்சப்பா யென்ன சொல்வேன் அத்தகடு பழுத்து

பிலமான தங்கமதுக் கதிகமதாய்க் காணும்

மூச்சப்பா ஓடாது சுழினை குடம் பாரு

முத்தியுள்ள வினோதமதை முன்னிலையாய்ப் பாரே. 39

முன்னிலையாய் னின்றதொரு கேசரி வினோதம்

முத்தியுள்ள வினோதமதை மூடரிட நீயும்

தன்னிமையா யிக்கருவைப் பகராதே மைந்தா

தாரணியோ ரறிந்ததினால் சராசரங் களில்லை

புண்ணியனே யின்னூலைப் பதனமதாய் வைத்து

பொறுமையுள்ள சீஷருக்குப் புத்திமிகச் சொல்லி

கண்ணிமைபோ லின்னூலைப் பதனமதாய்ப் பாரு

கருணையுள்ள சீஷருக்கு உபதேச வைய்யே. 40

வையப்பா உபதேசம் யாருக் கென்றால்
மைந்தனே யெச்சாதி யானா லென்ன
மெயப்பா தீராத சீஷன் வேணும்
மென்மையுள்ள புத்தியதா யிருக்க வேணும்
செயப்பா வாக்குறுதி மனதுறுதி கண்டு
திடசுத்த முள்ளவராய்ச் சேர்த்துக் கொண்டு
நெயப்பா தன்னாலே நீராடச் சொல்லி
நேசமுடன் னருகிருத்தி விபூதி சாத்தே. 41

சாத்துவது உத்தளமாய் விபூதி சாத்திச்
சகலகர்மம் பாவமோசன மென்றிட்டுப்
பொத்திமிகப் புருவமதிற் பொட்டு மிட்டு
பூரணமாய் மலர்தூவி அர்ச்சனைகள் செய்து
பாத்திபனே தூபமோடு தீபங் காட்டி
பக்குவமாய்க் குருசூட சங்கதிர செப்பி
கூத்துவனார் தான்விலகும் அகாரஞ் சொல்லி
குடியிருப்புப் புத்திரமாகும் உகாரஞ் சொல்லே. 42

சொல்லடா ஆக்கையுர்க் காதார மான

துருவமுள்ள மகாரமென்ற் மவுனஞ் சொல்லு

வெல்லடா மூன்றினுட விபரஞ் சொல்லு

மென்மையுடன் பூசிக்குங் காலஞ் சொல்லு

வில்லடாவாசியுட விபரஞ் சொல்லுயிரு வென்றோதே. 43

ஓதியதொ ருண்மையெல்லா நன்றாய்ச் சொல்லி

உண்மையுடன முதளித்து தாம்பூல நல்கி

பேதியாதொரு மனதாய் நின்வாய் நில்லு

பெரியோரைக் கண்டவுடன் தெண்டம் பண்ணு

சாதியென்ற யேழுவகை யுந்தன்னுயிர் போலக்காரு

சமையமென்ற சமையமதிற் சார்ந்து நில்லு

சோதியென்ற பரஞான கேசரியைக் காரு

சுகமான நூலெடுத்து மவுனமதாய் பாரே. 44

மவுனமென்ற குருபதந் தானேதோ வென்று
　　மயங்காதே மைந்தனே சொல்லக் கேளு
மவுனமென்ற கேசரத்தில் மனதை நாட்டி
　　கதிபெறவே கண்டத்தில் இலங்கேன் நூனி
தவனமுடன் புருவநடு புடதி யோரஞ்ச
　　தானந்தப் பிரம்மவொளி தன்னில் பாரு
கவனமுடன் பார்பதுதான் மூலங் கொண்டு. 45

பார்கையிலே பரமவொளி தன்னிலே தான்
　　பகலவன் போலாவி வட்டங்கண்ணில் காணும்
ஏற்கையுள்ள வட்டமடா யென்ன சொல்வேன்
　　இரவிதனில் மதியொடுங்கும் யேக ரூபம்
சேர்க்கையுள்ள ரூபமடா மவுன பீடம்
　　சிவா பிரம்ம பதமான பீடம்
தீர்க்கமுள்ள சிவகளை சென்றிருக்கும் பீடம்
　　சிவாயகுரு சிவயோகத் திறந்தான் பாரே. 46

திறமாகப் பார்பதற்கே வாசி யோக
தீர்கமுடன் சொல்லுகிறேன் மைந்தா கேளு
உரமான பீடமடா நந்தி பீடம்
ஓங்கார மானதொரு பீடந் தன்னில்
பரமான அகாரமுடன் உகராம் ரெண்டு
பத்திகொண்டு ஓங்காரந் தன்னில் நாட்ட
வரமான மூலமதில் அக்கினி கொண்டெரி
மகத்தான ஓமகுண்ட மென்னும் பேரே. 47

பேரான ஓமமவள் குண்டந் தன்னிற்
பிரியமுள்ள சமுத்துகளை ஆகுதிகள் செய்தால்
நேரான அக்கினியை யென்ன சொல்வேன்
நிலையாத அக்கினியிற் சென்று கொண்டு
வாரான ரெசகத்தாற் பூர்கமே செய்து
மார்கமுடன் கும்பகத்தில் நின்றா யானால்
மாறா தாவிவட்டந் தன்னி லேதான்
தானமகத்தான தீபவொளி காண லாமே. 48

காணவே தீபவொளி கண்ணிற் கண்டால்
கயிலாச மோட்சகெதி பதவி யுண்டாம்
பேணவே அட்டகர்ம சித்தி யுண்டாம்
பிலமான வாசியதுக் குயிருண் டாகும்
பூணவே கர்மசித்தி காய சித்தி
பொருளான பொருள்விளைக்கும் வாத சித்தி
தோனவே தொட்டதெல்லாஞ் சித்தி யாகுஞ்
சுத்தமுள்ள கேசரி வினோதம் பாரே. 49

பாரப்பா பரஞான கேசரி வினோதம்
பருவமுடன் சொல்லுகிறேன் நன்றாயக் கேளு
காரப்பா செம்பதுவும் யிரும்பு போலாகக்
கருமானஞ் சொல்லுகிறே நன்றாய்க் கேளு
வீரப்பா கொண்டதொரு ----- -- -----
சேரப்பா பரிதியோடறு சரக்குங் லிங்கம் கூட்டி
செம்மையுள்ள சரக்குநிறை பிரதிவியைக் கூட்டே. 50

கூட்டியே தான்பொடித்துப் பழச்சாறு விட்டு

குமுரவே யீறாறு சாமந் தானும்

ஆட்டியே வழித்துருட்டி வட்டுப் பண்ணி

அப்பனே புடம்போடு சிவயோகப் படிக்கி

பூட்டியேபுட மாரி யெடுத்துக் கொண்டு

புகழான மருந்திடைக்கிச் செம்பை வாங்கி

காட்டியே குகைதனிலே யுருக்கி யந்த

நலமான மருந்தையதில் சேத்துக் கொள்ளே. 51

கொள்ளப்பா செம்போடே மருந்து சென்று

குளுகுளென்று உருகும்போ தெடுத்து நீயும்

மெள்ளப்பா தரைதனிலே சாயத்துப் போடு

மென்மைபெற ஆரினபின் னெடுத்துப் பாரு

விள்ளக்கே கரிப்போலேக் கருத்துப் போகும்

மென்மையுடன் தானடிக்க நொறுங்கிப் போகும்

அள்ளக்கே ளதையெடுத்துப் பதனம் பண்ணி

அதுக்குநிகர் தங்கத்தைச் சேத்துக்கொள்ளே. 52

செத்துமிகத் தானெடுத்து வைத்துக் கொண்டு

சிவமான வெள்ளியிலே பத்துக் கொண்டு

காத்து மிகத் தான்கொடுத்து உருக்கிப் பாரு

கருவான வெள்ளியது சிவந்து போகும்

மாத்துமிகத் தானெரிப் பழுத்துப் போகும்

மார்கமுள்ள தங்கமதை வைத்துப் போத்தி

பூத்தமலர் வாசனைபோல்ச் சிவயோக கத்திற்

பொன்னொளி போலக் கண்ணொளியைப் பூட்டிப்பாரே.

53

பூட்டிப்பா ரின்னமொரு கேசரி வினோதம்

புகழான பரஞானகேசரி தன்ன ருளால்

நாட்டிப்பா ரிரும்பதுவுஞ் செம்பது போலாக

நயமாகச் சொல்லுகிறே நன்றாயக் கேளு

வாட்டமொன்றும் வெண்மங் காண லிங்க

மரிதாரம் ------- காரங் கூட்டி

தெட்டமுடன் மனோசிலையும்---- அப்புஞ்சேர்

ஒன்றாய்க் கலவமதில் பொடியாக பண்ணே. 54

பொடியான சாக்கினிலே பழச்சாறு விட்டு
பூட்டிநன்றா யரைத்திடுவாய் மையதுபோல் மைந்தா
நெடிதாக அரைத்துருட்டி வட்டது போல்பண்ணி
நேர்மையுடன் புடம்போடு சிவயோகப் படிக்கி
வடிவான புடமாரியெடுத்து அதை மைந்தா
மார்கமுட னிதுக்குநிகர் அய்ப் பொடிதான் சேர்த்து
கெடியாகப் பொடிபண்ணிக் குகைதனிலே செலுத்திக்
கிருபையுடன் குகையாருக வூது ஆதே. 55

ஊதிநன்றா யுருக்கியதை யெடுத்து மைந்தா
உத்தமனே தரையில்விடு தண்ணீர் போலாம்
ஆதியென்ற குருபரனேத் தொழுது பொத்தி
அன்பாகத் தானெடுத்துப் பாரு பாரு
வாதிகள்தன் மனதுமெய்த்த செம்பே யாகும்
மைந்தனே அச்செம்பை பதனம் பண்ணி
நீதியுட னிதுக்குநிகர் தங்கஞ் சேர்த்து
நேர்மையு னுருக்கியொரு மணியாய் வாங்கே. 56

வாங்கியந்த மணியதனை யெடுத்துக் கொண்டு

மார்கமுடன் கேசரியை மனிதில் நோக்கி

பாங்குபெற வெள்ளிதனை யுருக்கி நல்ல

பழப்பான செம்புதனிற் பத்துக் கொன்று

ஆங்கதிகொண் டேயதனை யுருக்கிப் பாரு

அன்பான பொன்னொளியை யென்ன சொல்வேன்

பூங்கமல மாதுவய தீரெட் டாகும்

பூரணமாய் சிவயோகத் தவத்தில் நில்லே. 57

தவமான தவந்தனக்கு உறுதி நிஷ்ட்டை

தன்மையுள்ள நிஷ்ட்டைதனக் கிறுதி கேளு

சிவமான சிவதவமே அல்லா துண்டோ

சிவசிவா பூரணத்திற் சேந்து நில்லே

நவமான நவக்கிரெகந் தன்னிற் பாரு

நடுவான அனுக்கி ரகத்தில் நின்று

அவமான புத்திகளை அகலத் தள்ளி

அருளான கேசரி வினோதம் பாரே. 58

பாரப்பா கேசரி வினோதம் நூறும்
    பத்திக்கொண்டு சிவயோகமிரு நூறும் பாரு
சேரப்பா மனந்தெறி ஆயிரமும் பாரு
    சிவசிவா பலதிரட்டு அஞ்நூறும் பாரு
நேரப்பா வயித்தியநூ லென்பதும் பாரு
    நேர்மையுடன் அன்பது முப்பதுவும் பாரு
சீரப்பா சோசியமும் பதினெண் பாசை
    செம்மையுடன் பாத்தவனே சித்த னாமே. 59

சித்தமென்ற தயவுபரி பூரணமாய் நின்றாய்
    தேவாதி தேவனென்ற பேருண் டாகம்
பத்த மில்லாச் சித்தமதா யிருந்தா லென்ன
    பலருசியில் மனதுருகி யானா லென்ன
குத்தம்வருஞ் செடந்தனக்கு மைந்தா் மைந்தா
    குருவான பெரியோரை அடுத்துக் காரு
மெத்தெனமாய்த் சியாரை யகலத் தள்ளி
    வேதாந்த சாஷ்திரத்தில் விரும்பி நில்லே. 60

விரும்பிமிக யின்னமொரு கேசரி விநோதம்
மெய்யாகச் சொல்லுகிறோம் விரும்பி கேளு
அரும்பான அரிதாரம் யீய மாக
ஆரறிந்து செய்வார்கள் அரியும்வகை சொல்வேன்
கரும்பான ஆகாசம் பிரிதிவியுங் கூட்டி
கணக்காக யிதுக்குரெட்டி மல்தேவி சேத்து
குரும்பான குணம்நிறுத்தி அமுர்தம் தாலாட்டி
குணமாக வழித்தெடுத்து குகைதனிலே வைய்யே. 61

வைய்யப்பா குகைதனிலே சில்லும் போட்டு
மார்கமுடன் மணசீலை வலுவாய் செய்து
பையப்பா சரக்கினுட நீதானங் கண்டு
பக்குவமாய் பொடம்போடு குருவை நோக்கி
பொயப்பா போகாமல் சரக்கு மூன்றும்
பொருந்தி யொன்றாயுருகி யதுயீய மாகும்
மெய்ப்பா சொல்லுகிறேன் வாத ததுக்கு
விசையான யீயமடா தங்கஞ் சேரே. 62

சேரப்பா தங்கமது உருகும் போது

செம்மையுடன் நதிடைக்கி யீயஞ் சேர்த்து

பாரப்பா உருகியது ரெண்டு மொன்றாய்

பக்குவமாய் தானிருக்கும் வெள்ளி போல

நேரப்பா நின்றகுரு தன்னைப் பொத்தி

நிமகனே செம்பதனை உருக்கிக் கொண்டு

வீரப்பா கொண்டதொரு தாரந் தன்னை

விபரமுடன் பத்துக்கு ஒன்று தாக்கே. 63

தாக்கியொன்றா யுருக்கியதை யெடுத்துப் பாரு

தண்மையுள்ள பசுமையதா யிருக்குந் தங்கம்

பாக்கியமாய் நின்றதொரு தங்கத் தாயை

பரப்பிரம்ம சோதித்தா யென்று பொத்தி

வாக்கிங்கள் தவறாமல் கேசரியை நோக்கி

மார்கமுடன் காயாதி கர்ப்பமது கொண்டு

போக்குவரத் தாகிநின்ற வாசியுட யோகம்

பூரணமாய் நின்றதொரு சிவயோ கந்தான்.

ஆக்கைதனக் குறுதியென அறிந்தே னந்த

ஆதியந்தப் பாரபரத்தி னருளை கண்டே. 64

அருளான பரஞான கேசரிதன் னருளால்

ஆதியந்தப் பொருளறிந்து அதனில் மனமாக

இருளான யிருளறுத்து யேகவளி தன்னில்

இரவிமதி சுரிணையென்ற மண்டலமுந் தாண்டி

பொருளான தீபமதில் புக்கியொரு மனதாய்

பூரணமாய் நின்றதொரு மதியமுர்தங் கொண்டு

குருவான பதிநோக்கி திரும்பிடும் போதளவில்

குணமான மனோமணியைக் குருவினிடங் கண்டேன். 65

கண்டந்த மனோமணியின் கிருபையினால் மைந்தா

காசினியிற் பெரியோர்க்கு பிள்ளை யாகி

தொண்டனென நின்றனடா கோடி காலஞ்

சொர்கபத மெய்க்கவே ஆனதுருவஞ் சென்று

நின்றனடா பரஞான கேசரியை நோக்கி

நிலைதவரா சித்தனென்றுந் தேவ னென்றும்

கொண்டனடா குருஞான தேசிகன் தன்னருளால்

கோதிலாக கேசரி வினோதமது பாரே. 66

பாரப்பா யின்னமொரு கேசரி வினோதம்

பரிவான ஆதியந்தஞ் சத்திசிவ மாச்சு

நேரப்பா சத்திசிவ மண்தண்ணீ ராச்சு

நிசமான மண்தண்ணீர் கார சாரமுமாம்

ஆரப்பா அறிவார்கள் கார சாரத்தை

அப்பனே சொல்லுகிறேன் விந்துனாத முமாம்

சேரப்பா நாதமுடன் விந்துவது சேர்க்க

செண்மையுடன் கட்டியது மணிபோலு மாச்சே. 67

ஆச்சப்பா மணியான ரசமணிதான் மைந்தா

----------- ----- ------- ---

பேச்சப்பா பேசாமல் சிவமாலை செய்து

பேணியே சேவித்திடவேயேட வட்டமுஞ் சித்தே. 68

சித்திக்க யின்னமொரு வினோமது கேளு

சிவசிவா நாகரசம் ரெண்டுமது கூட்டி

முத்திக்கு மோட்சமெனப் பிரிதிவி தன்னோடே

முன்பின்னாயப் போகாமலிடை சரியாய்ச் சேர்த்து

மத்திக்கும் போகழனில் மாலினுட னாதம்
மறக்காதே துரிசுடனே ஆகாசங் கூட்டி
சத்திக்குத் தனதான கலவமதி லிட்டு
தன்னமுர்த பானமதரில் தானரைத்து கொள்ளே. 69

கொள்ளவே குகைதனிலே அரைத்த மருந்திட்டு
குவியவே வாய்மூடி மண்சீலை செய்து
உள்ளமே தான்குளிர குருபூசை செய்து
உத்தமனே நிறையரிந்து புடம்தனைப் போடு
வள்ளலே புடமாரித்தா னெடுத்துப் பாரு
மார்கமுடன் தாண்குறுகி மணியது போலிருக்கும்
துள்ளவே மணிக்குநிகர் தங்கமது சேர்த்து
சுகமாகக் குகையிலிட்டு உருக்கஒரு மணியாம்
மெள்ளவே அம்மணியைக் கலவமதி லிட்டு
மென்மைபெத்தானுடைத்துப் பொடியது போலப்பண்ணே.
70

பண்ணியதோர் பொடிக்குஅரை காரக் கூட்டி
பக்குவமாய்த் தானரைப்பாய் வாய்நீர் விட்டு
புண்ணியனே தானரைப்பாய் மெழுகு போலே
புத்தியுடன் தானரைத்து வழித்து ருட்டி
தன்னிமையாய் வில்லைதட்டி ரவியில் போடு
தண்மையுடன் காய்ந்தபின்பு எடுத்துப் பாரு
வன்னியுட மகிமையினால் காய்ந்து நல்ல
மாசத்த வெண்மையதாய் பொடியாய்ப் பண்ணே. 71

பொடியான பொடியதுவும் லேசாயப் பண்ணி
புத்தியுடன் பாணிதனி லடைத்துக் கொண்டு
படிவான செம்புவெள்ளித் தகடாய்த் தட்டி
பாலகனே முன்பொடியிற் பணவிடை யெடுத்து
வடிவான யேசுபரிக்குப் பூசை பண்ணி
வாய்நீரால்த் தகட்டின்மேல்ப் பூசி கொண்டு
கெடியாக ஓட்டில்வைத்துப் புடமே போடு
கேள்வியென்ன தகடதுவும் பழுத்துப் போமே. 72

பழுக்குமடா வெள்ளியிலே பத்து மாத்து

பாலகனே செம்பதிலே ஆறு மாத்து

தழுக்கான குடவனிலே யேழு மாத்துத்

தான்பழுக்குந் தன்மனது சாந்த மானால்

அழுக்கரவே தேகசுத்தி பண்ணிக் கொண்டு

அப்பனே காயாதி கர்ப்பங் கொள்ளு

வழுக்கலென்ற வழுக்கலது விலகுத் தானால்

மார்கமுடன் கால்விசையாய் நடக்க லாமே. 73

நடப்பதற்கு யின்னமொரு கேசரி வினோதம்

நாடெல்லாச் சென்றுவாரக் குளிதை சொல்வேன்

கடப்பதற்குத் தான்குதிக்குர சமதனை வாங்கிக்

கருவான பழச்சாத்தில் ரவிபிஷ் சேத்து

திடப்படவே கரைத்தந்த... சமதனை விட்டுச்

செம்மையுடன் எடுப்பெத்தி திருவருளைப் பொத்தி

படபடத்து அக்கினியை யெரியாமற் சீராய்

பக்குவமா யீரஞ்சுயெரித்து மிக வாங்கே. 74

வாங்கியந்த ரசமதுக்குச் சரியிடை யாயப்பூவை
வரிசையுடன் பொடித்ததுவைக் கலவமதி லிட்டு
பாங்குபெறப் பழச்சாத்தால் மையயது போலாட்டி
பக்குவமா யாட்டுவது ரசமதனை விட்டு
தாங்கிமிக அரைத்துடனே பூவு ரசமுந்
தான்சேர்ந்து கட்டியது வாலையது வாகும்
தீங்கில்லா வாலைதன்னை உருட்டியொரு மணியாய்
செம்மையுடன் தானுருட்டி அம்மணிக்குக் கேளே.

75

கேளடா அம்மணிக்கு நாளி லொன்று
---- அரைத்து மணிதனக்குப் பூசி
வாளடா காயவைத்து மணலரைத்துப் பூசி
மார்கமுடன் மண்கிலை வரிசையுடன் சுத்தி
கோளடா வாராமல் மனோர் மணியைப் பூசி
கூர்மையுட னிரையரிந்து புடந்தனைப் போடு
வேளடா யெரித்தநெத்திப் பூமியின் கண்ணாலே
விசையடங்கி யுருகியது மணியது போலாமே. 76

ஆம்பொ புடமாரி மணியதனை யெடுத்து

அம்மணிக் குத்தமாதுவும் அமைத்துமிகக் கொண்டு

நாமப்பா சொல்லுகிறோம் மணியதனைப் பூசி

நன்மையுள்ள மனோமணியென் றதனை மிகயெடுத்து

வாமப்பால் கொண்டந்த மணியதனை வாயில்

வணக்கமுடன் தானடக்கிச் சிவயோகத் திருந்தால்

காமப்பால் கசியாது கருணையுடன் சேர்ந்து

காலான வாசியது கடக்காது மெய்யே. 77

மெய்யான வாசியது அசையாது நின்று

மேலான பரஞான கேசரிதன் னருளால்

அய்யனே ஆக்கையது யிறுகிவலு வாகும்

அசையாது யில்லமது அடிப்படைதான் பிலத்தால்

துய்யனே மனோமணியு மாளிகையில் நின்று

துலங்கிவிப்பாள் தூரதிஷ்டி காரியங்க ளெல்லாம்

கய்யப்பா கண்டதுவுங் காச்சிமய மாகுங்

கருணையுடன் சஞ்சாரச மாதுதனை பாரே. 78

பாரப்பா சஞ்சாரச மாதினுட நேர்மை
பலகாலுங் கேசரத்தில் மனதைமிக நாட்டி
காரப்பா கருணைவிழிக் கண்ணாலே நீயும்
கற்பூர மானதொரு தீபவொளி தன்னை
நேரப்பா யிருக்கையிலு நடைக்கையிறு மைந்தா
நேர்மையுள்ள அரிவதனை அதனில்மிகத் தாக்கி
சேரப்பா பரஞான கேசரிதன் னருளால்
சிவசிவா மவுனமது சஞ்சார மாமே. 79

ஆமப்பா சஞ்சாரச மாதுதனில் நிற்கில்
ஆச்சரியம் பேசாதே நல்லோரைப் பாரு
தாமப்பா மனதுருமை யானவர்க ளிடமாய்
தன்மையுடன் பசிதாகச் சாந்திமிகச் செய்து
வாமப்பா மதியான அமுர்தமதை நீயும்
மகத்தான பரஞான கேசரிதன் னருளால்
ஆமப்பா அகலாமல் சிவசக்தி பூசை
அனுசரிக்கில் உன்தேகம் அருளான சித்தே. 80

சித்தான அன்முத லட்டமா சித்துஞ்

சிந்திக்கில் முன்னின்று பரஞான தேசி

உத்தம்மா முன்திடத்தில் அகலாமல் நின்று

உண்மையென்று பொருளை யெல்லாம் உறுதியதாக

பத்துதல்போல் நன்றாகக் கருணை செய்வாள்

பாலமுர்தம் பசிதீர வூட்டி விப்பாள்

மாத்துமினி யென்னதபம் வேணு மய்யா

மகத்தான பரஞான கேசரியை நோக்கே. 81

நேர்க்குவதுக் கின்னமொரு கேசரி வினோத

நோயான நோயகளெல்லா நொருங்கி மிகப்போக

தீர்கமுள்ள தேகமது சித்திமய மாக

சிவசிவா வாகியது தீறமுடனே நிற்க

மார்க்கமுடன் பரஞான கேசரியை நோக்க

மகத்தான குருவருளால் தீபமதைக் காண

நாக்குநுனி யமுர்தமது பூரணதிற் செல்ல

நாதாந்த கற்பமது நன்மைதரும் பாரே. 82

பாராப்பா நாதன் தய்யோதரி தன்மூலம்

பாரான பார்பதித்தாய் பதிவான மூலம்

நேரப்பா நின்றதிருக் கமலமதின் மூலம்

நேர்மையுள்ள மும்மூலங் குருவருளால் கண்டு

சேரப்பா கலவமதி லொரிடையாய்க் கூட்டி

சிவமான மூலமதை விட்டுமிக ஆட்டி

காரப்பா கண்ணிலிடு மையயது போல்மைந்தா

கருணையுடன் வழித்துருட்டி வட்டதுபோற் பண்ணே.

83

பண்ணியதோர் வட்டதனை ரவிதனிலே போடு

பதமாக அரைவாசி காயந்ததின் மேல்மைந்தா

புண்ணியனே மண்சீலை அயந்துமிகச் செய்து

புடம்போட நிதானமதைப் புகலுவதைக் கேளு

தன்னிமையாய்ச் சொல்லுகிறேன் பலந்தனக்கு மைந்தா

தயவாக ஒருமுழமே புடமதுதான் போதும்

வன்னியென்ற அழல்மூட்டிப் புடமாரிப் பாத்தால்

மாசத்த நீரதுபோல் பற்பமது வாமே. 84

ஆமென்ற பற்பமதைப் பரணிதனி லடைத்து

அன்னவாத காலசந்தி பணவிடைதான் கொண்டால்

நாமென்ற வாதரித்த சிலேற்பனத்தி னாலே

நன்றாகத் தான்வளர்ந்த வியாதிகள் தானெனல்லாம்

போமென்று சொன்னவுடன் வியாதிகள் தான்தீரும்

பூரணமாய் நின்றதொரு பற்பமது வாலே

தாமென்று செல்லுபரஞான கேசரியால் சடசு

தானந்த மென்ற அறிவுதனில் நில்லே. 85

நில்லென்ற நிலையரிந்த சித்தாதி தானு

நிச்செயமாய்ப் பரஞான கேசரியைப் பாத்து

சொல்லொன்று வந்தவராத மூலமது னாலுந்

தொடுகுறிபோல்த் தானறிந்து துருவமதில் நின்று

வில்லென்ற விவைபோலே அம்மூலந் தன்ன

மேலான பற்பமதாய் விரும்பிமிக உண்டு

கல்லென்ற தேகவச்சிர காயமது வாகி

கற்பூர தீபமெனக் கருணைபெற நின்றால்

கொல்லென்று வந்ததொரு கூத்துவனார் தானும்

குருவான பதினோக்கிக் குணமாகு வாரே. 86

வாரப்பா பற்பமதிப் பணவிடைதான் நீயும்
மகத்தான தேனதிலே மருவிமிகக் கொண்டால்
வீரப்பா கொண்டதொரு குன்மமுடன் சயமு
மேலான மகோதரமும் பித்தபாண் டுடனே
நேரப்பா தீந்துவிடுங் கேசரிதன் னருளால்
நிசமா முலைப்பாலில் பணவிடைதான் கொண்டால்
மாரப்பா அடைத்துவிடும் மூடசை வாய்வாது
மாறாத தலைக்குத்துச் சன்னிகள் போய்விடுமே. 87

விடுமென்று திரிகடுகு சூரணமே செய்து
மேலான தேன்விட்டு பற்பமதில் கொண்டால்
கெடுமந்த நீர்த்தோஷம் சுரமுடனே தோசம்
கேடுள்ள குளிர்சுரமுங் கெதிகெட்டு ஓடும்
சுடுமந்த மூலமுடன் பவுந்திரங்க ளெல்லாஞ்
சுழிவாகத் தீருதற்குச் சொல்லுகிறோஞ் சுடுதி
வடிவான சுடுதிதனில் பற்பமது கொள்ள
மார்கமுடனே தீருமண்டலத்தில் தானே. 88

தானான  பரஞான கேசரிதன் னருளால்

தயவான பற்பமதில் பணவிடை தானெடுத்து

தேனான அமுர்தமதில் மண்டலமே கொண்டால்

சிவசிவா மந்தார காசமோடு யிருமல்

விணான யீளையோடு குட்டமோடு கிரந்தி

மெய்யான பயித்தியமும் விட்டுவிடு மய்யா

கோனான குருவருளைசாத நித்தம் பொத்தி

குருவான பரஞான கேசரியைக் காரே. 89

காரப்பா மனதுறுதி வாக்குருதி யாலே

கையகண்ட கேசரியின் விநோதமது கேளு

நேரப்பா நெத்திகத்தில் வருநோவுக் கெல்லாம்

நிச்செயமாய்த் தீர்வதற்கு மருந்துவகை கேளு

பேரப்பா பெரிதான அண்டமொடு சீனம்

பீதரோ கணியுடனே துரிசுமிகச் சேத்து

பாரப்பா சரக்குங் கலவமதி லிட்டுப்

பக்குவமா யொரிடையாய்க் கலசப்பால்விட்டு மிகஆட்டே.

90

ஆட்டுவது அதின்பிறகு பழத்தினுட சாரு

அப்பனே பழமானால் கண்டங்கத் தரியாம்

தீட்டுவது அப்பழத்தின் சாரதனா லாட்டி

திரமாக மய்யதுபோல் சேத்துமிகக் கொண்டு

நாட்டியே கயறதுபோல் திரட்டிமிக வைத்து

நன்றாக நிழலுலத்தி நன்மையுடன் னெடுத்து

காட்டியே முலைப்பாலில் கண்ணில் மிகப்போட

கரையாக பூவிடனே காசமது போமே. 91

போகுமே புகைசலோடு நீர்ப்பாச்சல் சிகப்பு

புழுவெட்டு அமரமோடு பொல்லாத குந்தம்

வாகுடைய மாலைக்கண்ணத்தி குருதி யோடடம்

வானடைப்புச் சதையப்பு மகத்தான நெரிசல்

யேகுமே யிருந்திடம் விட்டப்பாலே மைந்தா

யென்னசொல்வேன் நெத்திரத்தின் வியாதிகள் தானோடும்

பாகுடைய மாத்திரைதன் போதனைக் கேளு

பதிவான நேத்திர சிந்தாமணியு மாமே. 92

மணியான பரஞான கேசரி வினோதம்

மார்கமு னூரதுவும் வரிசையுடன் பாத்தால்

கனியான நெல்லியுட கனியதுபோல் மைந்தா

காயாதி கற்பமுதல் யோகாதி சித்தி

பிணியான பலபிணியும் காணுது மைந்தா

பீலிமான வாதமது நிலையாக நிற்கும்

துணிவாக மனதுபரி பூரணமே யாகும்

சுயஞ்சோதியான தொருதீப மதிர தானே. 93

தானவனாய் நின்றதொரு பூரணந்தான் மைந்தா

தன்மையுள்ள பூரணத்தை ஆர்தான் கண்டார்

கோனவனாய் நின்றகுரு தன்னைக் கண்ட

குருபுத்தினா னதொரு சிஷந் தானும்

நானவனா மென்றெண்ணிப் பூரணத்தை கார்பான்

நன்மையுடன் குருபதத்தில் நயந்தேரி நிற்பான்

ஆனவனாம் அவன்றானும் நால்பதமுங் கண்டு

அன்பான லோககுரு ஆவான் பாரே. 94

பாரப்பா பிரிதிவியை அறிய வேணும்
பண்பான அப்பனிடஞ் சேர வேணும்
கூரப்பா தேய்வுதன்னைக் காண வேணும்
குறிப்பாக வாய்வுதன்னைக் கொள்ள வேணும்
நேரப்பா யிதுநாலு மறந்து கொண்டு
நேர்மையுடன் ஆகாசம் புக்க வேணும்
பேரப்பா ஆகாசந் தன்னில் நின்று
பிலமான பிரிதிவியைப் பேணிப் பாரே. 95

பாதத்தினா லென்னவரு மய்யா அய்யா
பரமான சற்குருவைப் பணிந்து போத்தி
காதத்தினா லஞ்சினுட விபரந் தன்னைக்
காட்டுவா ரதின்பிறகு கருணை வைத்து
சேதத்திற்குச் சேர்மானத் திறமுஞ் சொல்லி
தெகுட்டாத மதியமுர்தச் செயநீர் காட்டி
வாதத்துக்கு வகைதுகையு நன்றாய்ச் சொல்லி
மகத்தான குருவாக வழிசொல் வாரே. 96

சொல்லுவார் சிவஞான போதந் தன்னை

சொல்லத்த மவுனமதைத் துலக்கி விப்பார்

வெல்லுவார் வேதாந்தம் சித்தாந்தம் ரெண்டும்

விபரமுடன் தினவயனம் விளங்கிக் கொண்டு

தள்ளுவார் சத்துரு மித்துருவு ரெண்டுஞ்

சரங்கமாய்த் தானகத்தித் தண்மை பூண்டு

கொல்லுவார் கருவிகா னாதி தன்னை

கொண்டபின்பு சிவனென்று குறிசொல் வாரே. 97

குறிகாட்டி அக்குறிக்கு மேலே நின்ற

குருவான பதிகாட்டி அப்பதிக்கு மேலே

நெறியான பொருள்காட்டி ......................................

..........................................................................................

பறியான பரஞானசோதி யிதுதா னென்றும்

பரப்பிம் மானகுரு வஷத்து வென்னும்

அறியான முதலெழுத்துக் காதி யென்றும்

அரகார அதின்பிறகு தானென் றாரே. 98

தானென்ற உலகமெல்லாந் தானே தானாய்

சகலகலைக் கானமெல்லாந் தானே தானாய்

தேனென்ற மதியமுர்தந் தானே தானாய்

திறமான கற்பமது தானே தானாய்

நானென்ற ஆணவமுந் தானே தானாய்

நலமான வாசிசிவ யோகந் தானும்

கோனென்ற பரஞான கேசரியுந் தானாய்

குறிப்பான சீவமுத்தா செய்கை தானே. 99

தானேதான் தானவனா யிருந்து கொண்டு

தண்மையுள்ள பரஞான கேசரியை நோக்கி

தேனேதான் னதிலும் வெகு ருசியாய் நின்ற

திருவான கேசரி வினோதம் னூறும்

பூணேதான் மனதினிலே மவுன மாகப்

பூண்டுகொண்டு அட்டமா சித்து மார்கம்

வீணேதான் போகாதே வினோதம் பார்க

மெஞ்ஞான குருதீப சரண முற்றே. 100

முத்தான பரஞான கேசரி வினோத

முழுதுமிதை மவுனமதாய் மனதுள் கொண்டு

சித்தான சித்துவிளை யாடு மைந்தா

சிவயோகப் புனிதமதிற் சேந்து நில்லு

வித்தாரஞ் தான்பேசி திரிவா றோடே

வீரியங்கள் பேசாதே விண்ணை நோக்கி

கர்த்தாவே கெதியென வெண்கமல நோக்கிக்

கற்பூர தீபமதில் கருத்தாய் முற்றே. 101

# துணை நூற்பட்டியல்


கதிரை வேற்பிள்ளை, நா.,
தமிழ் மொழி அகராதி,
கௌமாரீஸ்வரி , எஸ்., (பதி),
சாரதா பதிப்பகம்,
இராயப்பேட்டை, சென்னை,
இரண்டாம் பதிப்பு - 2003.

சண்முகம் பிள்ளை, மு., (தொகு),
தமிழ் - தமிழ் அகரமுதலி,
தமிழ் நாட்டுப் பாடநூல்
நிறுவனம், சென்னை,
முதற்பதிப்பு - 1985.

சிங்காரவேலு முதலியார், ஆ.,
அபிதான சிந்தாமணி,
கௌமாரீஸ்வரி, எஸ்., (பதி),
சீதை பதிப்பகம்,
திருவல்லிக்கேணி, சென்னை,
முதற் பதிப்பு - (செம்பதிப்பு )-2004.

சிதம்பரதாணுப்பிள்ளை, எஸ்.,
சித்தமருத்துவ உடல் தத்துவம்,
சித்த மருத்துவ நூல் ஆராய்ச்சி நிலையம்,
அண்ணாநகர் (கிழக்கு),
சென்னை, முதற் பதிப்பு - 1997.

தாமஸ், பி.ஆர்.,
அட்டாங்கயோகம்,
குறிஞ்சி பதிப்பகம், வில்லிவாக்கம்,
சென்னை, முதற் பதிப்பு - 2002.

மதுரைத் தமிழ்ப் பேரகராதி,
(இருபாகங்கள்),
சந்தியா பதிப்பகம்,
அசோக் நகர், சென்னை,
முதற்பதிப்பு - 2004.

முருகேசன், சி. எஸ்.,
சித்தர்களின் அஷ்டமாசித்திகள்,
அழகு பதிப்பகம்,
வில்லிவாக்கம், சென்னை,
மதற்பதிப்பு - 2000.

Tamil Lexicon (Vol. I to VII)
University of Madras,
Reprint, 1982.

# செய்யுள் முதற்குறிப்பு
## அகரநிரல்


| | பாடல் எண் |
|---|---|
| அங்கமெனும் | 16 |
| அரியாம் | 12 |
| அருளான | 65 |
| ஆச்சப்பா | 18,23,37,39,68 |
| ஆட்டுவது | 91 |
| ஆதிபராபரன் | 1 |
| ஆம்பொபுடமாரி | 77 |
| ஆமப்பா | 20,25,34,80 |
| ஆமென்ற | 85 |
| ஆனாலும் | 27 |
| ஊதிநன்றாய் | 56 |
| ஓதியதொருண்மை | 44 |
| கட்டிமிக | 29 |
| கட்டியதோர் | 22 |
| கண்டந்த | 3,66 |
| கண்டுமிக | 5 |
| காணவே | 49 |
| காரப்பா | 90 |
| குறிகாட்டி | 98 |
| கூட்டியே | 51 |
| கெசரிவினோதம் | 30 |
| கேளடா | 11,76 |
| கேளப்பா | 35 |

| | பாடல் எண் |
|---|---|
| கேளுநீ | 17 |
| கொண்டதொரு | 10 |
| கொள்ளந்த | 26 |
| கொள்ளப்பா | 52 |
| கொள்ளவே | 70 |
| சாத்துவது | 42 |
| சாரமுள்ள | 33 |
| சித்தமென்ற | 60 |
| சித்தாகும் | 13 |
| சித்தானகே | 81 |
| சித்திக்க | 69 |
| சிவயோகம் | 24 |
| செத்துமிக | 53 |
| சேத்தந்த | 21 |
| சேரப்பா | 32,63 |
| சொல்லடா | 43 |
| சொல்லுவார் | 97 |
| தவமான | 58 |
| தள்ளடா | 9 |
| தாக்கியொன்றாய் | 64 |
| தானப்பா | 28 |
| தானவனாய் | 94 |
| தானான | 89 |
| தானென்ற | 6,99 |
| தானேதான் | 100 |
| திறமாக | 47 |
| துணையான | 2 |

| | பாடல் எண் |
|---|---|
| நடப்பதற்கு | 74 |
| நில்லந்த | 4,31 |
| நில்லென்ற | 86 |
| நெரியென்ற | 15 |
| நோக்குவது | 19 |
| நேர்க்குவது | 82 |
| பண்ணியதோர் | 71,36,84 |
| பழுக்குமடா | 73 |
| பாதத்தினால் | 96 |
| பாரப்பா | 7,50,59,67,79,83,95, |
| பார்கையிலே | 46 |
| பூட்டிப்பார் | 54 |
| பேரான | 48 |
| பொடியான | 55,72 |
| போகுமே | 92 |
| மணியான | 93 |
| மவுனமென்ற | 45 |
| முத்தான | 101 |
| முன்னிலையாய் | 40 |
| முலமதிள் | 14 |
| மெய்யான | 8,78 |
| வழித்தொரு | 38 |
| வாங்கியந்த | 57,75 |
| வாரப்பா | 87 |
| விடுமென்று | 88 |
| விரும்பிமிக | 61 |
| வையப்பா | 41,62 |

# அருஞ்சொற்பொருள்

## அகரநிரல்

| | | |
|---|---|---|
| அட்டகர்மம் | - | ஆகருடணம், உச்சாடனம், தம்பனம், பேதனம், மாரணம், மோகனம், வசியம், வித்துவேடணமாகியகலை, |
| அண்டர்பிரான் | - | சிவபெருமான் |
| அப்பு | - | நீர் |
| அய்யன் | - | தலைவன் |
| அரிதாரம் | - | அரித்திராபம் |
| அவம் | - | பயனின்மை |
| ஆகுதிகள் | - | ஓமாக்கினி நெய்விடுதல் |
| ஆதிபராபரன் | - | கடவுள், பாரமார்த்திக பிரமம் |
| ஆருபம் | - | அருமையானவை |
| உத்தளம் | - | விபூதியைக் குழையாது பூசுதல் |
| கலவம் | - | கூட்டு |
| குரு | - | பிதா |
| குவம் | - | ஆம்பற்கொடி, அல்லிக்கொடி |
| குன்மம் | - | ஒரு வயிற்று நோய் |
| கெங்கை | - | கங்கை நதி |
| கெந்தீ | - | கந்தகம் |
| சங்கை | - | அளவு |
| சஞ்சாரம் | - | சஞ்சரித்தல் |
| சடத்துவம் | - | சடத்தன்மை |

| | | |
|---|---|---|
| சதிரம் | - | சதுரம் |
| சமதன் | - | இந்திரிய நிக்கிரகஞ்செய்பவன் |
| சன்னிகள் | - | சீதநோய், கண்டகுப்சம், சிம்பகம் தாந்திரிகம், பக்கின நேத்திரகம், ருக்தரகம், சிஃஂகுலீகம், பிரலாபம், அந்தகம், இரத்த ஷ்டீவி, சித்தவிப் பிரமம், சீதாங்கம், கர்ணிகம், அபின்னியாசம் என்ற பதின்முன்று வகைப்பட்ட சுரசன்னி நோய்கள். |
| சாதி | - | பிறப்பு |
| சாமம் | - | அறுகு |
| சிந்தாமணி | - | ஒரு மருந்து |
| சிந்து | - | முச்சீரிசையடி |
| சிபேற்பனம் | - | கோழை |
| சிவகளை | - | தெய்வப்பிரகாசம் |
| சிவஞானபோதம் | - | ஓரு அரிய பெரிய சிவசூத்திரம் |
| செந்தூரம் | - | இலிங்கபாஷாணம் |
| துய்யன் | - | பரிசுத்தன் |
| தவம் | - | நிலைக்கும் உரிய ஒழுக்கம் |
| துரிசு | - | துருசி |
| நீச்சு | - | மீன்கவுச்சு |
| பதனம் | - | பத்திரம் |
| பரணி | - | ஓர் பரத்திரம் |
| பவுந்திரங்கள் | - | பயுந்திரநோய் |

| | | |
|---|---|---|
| பற்மம் | - | விபூதி |
| பாத்திபன் | - | அரசன் |
| பிரிதிவி | - | பூமி |
| புடம்போடுதல் | - | புடமிடுதல் |
| பூரகம் | - | பிதுர்பிண்டம் |
| மகோதரம் | - | ஒரு நோய் |
| மன்மதன் | - | காமன் |
| மனோசிலை | - | பாஷாணம் (32) ல் ஒன்று |
| மனோன்மணி | - | ஓர் சக்தி |
| முரதம் | - | பாஞ்சசன்னியம் |
| வர்மம் | - | மருமம் |
| வன்னி | - | தீ |
| வாத்து | - | மரக்கொம்பு |
| வித்தாரம் | - | மிகுதி |
| வினோதம் | - | வியப்பு |
| வேதாந்தம் | - | வேதமுடிவு |

## ஞான கேசரியில் நோய்களும், நோய் தீர்க்கும் முறைகளும் அகரநிரல்

| நோய் | பாடல் எண் |
|---|---|
| அமரம் | 92 |
| இருமல் | 89 |
| கிரந்தி | 89 |
| குட்டம் | 89 |
| குந்தம் | 92 |
| குளிர்சுரம் | 88 |
| குன்மம் | 87 |
| சயமு | 87 |
| சன்னிகள் | 87 |
| சிகப்பு புழுவெட்டு | 92 |
| சுரம் | 88 |
| தலைக்குத்தல் | 87 |
| தோஷம் | 88 |
| நீர்த்தோஷம் | 88 |
| பயித்தியம் | 89 |
| பித்தம் | 87 |
| மனநோய் | 93 |
| மாலைக்கண் | 92 |
| யீளை | 89 |
| வாதம் | 93 |

# இறைவனைக் குறிக்க பயன்படுத்திய அடைமொழிகள்
## அகரநிரல்

| | பாடல் எண் |
|---|---|
| அண்டபிரான் | 5 |
| அய்யன் | 8 |
| ஆதி | 56 |
| ஆதிபரஞானகேசரி | 1 |
| குரு | 1 |
| குருபரன் | 56 |
| கோன் | 94 |
| சற்குரு | 39 |
| செகசோதி | 1 |
| சோதி | 44 |
| ஞானமயமான தீபம் | 1 |
| ஞானமயமானவன் | 1 |
| சா்க்குரு | 96 |
| பரஞானசோதி | 98 |
| பராபரன் | 64 |
| மெஞ்ஞான குரு தீபம் | 100 |

# ஞானகேசரியில் உள்ள சித்தர் குழுவுக்குறிச் சொற்கள்

## அகரநிரல்

| | பாடல் எண் |
|---|---|
| அட்டகர்ம சித்தி | 49 |
| அட்டகர்மம் | 29 |
| கயிலாக மோட்சகதி | 49 |
| குகை | 51 |
| கும்பகம் | 30 |
| கும்பம் | 15 |
| சதிரகிரி | 11 |
| சிவதீட்சை | 14 |
| சிவயோகப் பதவி | 9 |
| சீயநீறு | 36 |
| சுழிமுனை | 11 |
| தீபம், தீபாவளி | 82 |
| துரிசு | 35 |
| புருவ நடுக்கமலம் | 15 |
| பூரகம் | 30 |
| மண்சீலை | 84 |
| மனோமணி | 65 |
| வாமப்பால் | 77 |
| வெண்சாரை ரசம் | 25 |

